தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 20, திங்கட்கிழமை.

சித்திரை 7, பிரபவ, திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

ஒரு செயலைத் தொடங்குமுன் அதனால் அழிவதையும் அழிந்தபின் ஆவதையும் பின்பு உண்டாகும் ஊதியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஊட்டி மத்திய கூட்டுறவு விருந்தினர்கள் விடுதியில் புதிய அறைகள் கட்டுதல்.

400—(* வினா எண் 9360) திரு. கே. உச்சி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டியிலுள்ள மத்திய கூட்டுறவு வங்கி வளாகத்திலுள்ள கூட்டுறவு விருந்தினர்கள் விடுதியில் புதிய தங்கும் அறைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டுமான பணி துவங்கப்படும்?

[1987 ஏப்ரல் 20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய தங்கும் அறைகள் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஏராளமாக பயணிகள் வருவதன் காரணமாக அங்கே உள்ள தனியார்களுடைய ஓட்டல்களில் மிக அதிகமான கட்டணம் விதிப்பதால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதிக அறைகளைக் கட்டி வரக்கூடிய பயணிகளுக்கு நல்லவகையில் உதவி செய்ய அரசு இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து, புதிய விடுதி கட்ட ஏதாவது யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 17 கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக நிதி உதவி செய்து, 1964-வது ஆண்டு இந்த விருந்தினர் இல்லம் அங்கே கட்டப்பட்டது. அதிலே 20 அறைகள் இருக்கின்றன. அதிலே, குறிப்பாக, கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள், அந்த மாவட்டக் கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்தவர்கள், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் வந்து தங்குவதற்கும் இடம் தரப்படுகிறது. அவர்கள் தங்காத நேரத்தில் பொது மக்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதிலே ஏதாவது வாய்ப்பு இருக்குமானால் மேலும் கட்டிடம் கட்டலாம். ஆனால், இப்பொழுது கட்டப் பட்டிருக்கிற இடத்தில் மேலும் கூடுதலாகக் கட்டப்பட வாய்ப்பு இருக்கிறதா என்று கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த பொறியாளர் ஆகியோரைக் கேட்டபொழுது, மேல்தளம் ஓடு வேய்ந்த கூரையாக அமைந்திருப்பதன் காரணமாகவும் அடித் தளம் சரியாக அமையாததன் காரணமாகவும் மேலும் மாடி எழுப்புவதற்கு வாய்ப்பு இல்லையென்றும் ஆகவே, அதிலே கூடுத லாகக் கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லையென்றும் அக் கட்டிடம் பக்கத்திலே கூடுதலாகக் கட்டுவதற்கு இட வசதி யில்லையென்ற காரணத்தினால்தான் சாத்தியக் கூறுகள் இல்லை யென்று சொல்லப்பட்டது.

1987 ஏப்ரல் 20]

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள விடுதியை ஒட்டி இடம் இருப்பதன் காரணமாக, அந்த இடத்தில் புதிய விடுதியைக் கட்ட, அதை மறுபரிசீலனை செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் போதுமான அளவிற்கு இருக்கிறதா என்பதும் ஏற்கனவே அங்கே 20 அறைகள் இருக்கின்றபொழுது அங்கே வருகின்றவர்கள் பயன்படுத்துகின்ற அளவுக்கு வாகனங்கள் மற்றவை எல்லாம் விட்டுவைக்கப் போதுமான அளவிற்கு இடம் தேவை என்பதும் கவனிக்கப்பட்டு, இந்த இடங்கள் எல்லாம் போக மீதி இடம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி இடம் இருக்குமானால், அதற்கான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வசதி இருக்குமானால் மற்றவை பற்றி ஆராயலாம்.

குத்தகைதாரர்கள் பதிவு திருத்தச் சட்டத்தின் கீழ் குழுக்கள் அமைத்தல்.

401—(* வினா எண் 10118) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தகைதாரர் பதிவுத் திருத்தச் சட்டத்தின் கீழ் எத்தனை வட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அமைக்கப்படாத வட்டங்களில் அமைக்கும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) அமைக்கப்பட்ட குழுக்கள் செயல்படுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், மதுரை, அண்ணா மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 57 வட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) ஆம்.